Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC.No. 25/2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name : | கோமதி | Calling: | இல்லதரசி |
| Father's Name: | க/பெ.தியாகராஜ் | Religion: | இந்து |
| Village: | | Age: | 36 |
| Taluk: | கோயமத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 14.12.2022

| |
|---|
| SIGN : |

அ.சா. 2 முதன்மை விசாரணை.

1ம் எதிரி கோபியை தெரியும். 2 வது எதிரி ஜெயவேலுவை தெரியாது. அசா1 எனது தந்தை. 29.06.2017 ம் தேதி மாலை 05.00 மணிக்கு குந்தானிமேடு கிராமத்தில் உள்ள எனது பாட்டி வீட்டில் எனது தந்தையான அசா1 ஐ அடித்து தள்ளி உதைத்து, எனது தந்தையை தூரி கத்தியை காண்பித்து உன்னை உயிரோடு விடுவது இலலை. ஒரே குத்து தான் குத்திவிடுவேன் என்று 1ம் எதிரி மிரட்டினார். எனது தந்தைக்கு 1ம் எதிரி அடித்ததால் நெற்றியில் காயம் ஏற்பட்டு ரத்தம் வடிந்தது. வலது தோள்பட்டையில் அடிப்பட்டு ரத்தம் வழிந்து கொண்டு இருந்தது. கீழே தள்ளியதில் எனது தந்தை அசா1 க்கு ஒரு பல் உடைந்து விட்டது. கை, கால் முட்டிகள் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. கணுக்காலில் சிராய்ப்பு காயமும், முட்டிக்கு கீழ் முழங்காலிலும் அடிப்பட்டு இருந்தது. அதனால் நான் எனது தந்தையை வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலிசார் மருத்துவமனைக்கு வந்து என்ன ஆனது என்று என்னிடம் விசாரணை செய்து எழுதிக்கொண்டார். மருத்துவரும் எனது தந்தையை பரிசோதித்து என்னென்ன காயம் என்று எழுதிக்கொண்டார். போலிசார் என்னை விசாரனை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்கு வாய்தா கேட்டு அது நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டது.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) கோமதி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,

Judicial Magistrate , Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC.No. 25/2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name : | அண்ணாமலை | Calling: | விவசாயம் |
| Father's Name: | அப்பாவுகவுண்டர் | Religion: | இந்து |
| Village: | குந்தானிமேடு | Age: | 68 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 14.12.2022

SIGN :

அ.சா. 3 முதன்மை விசாரணை.

ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 , அசா2 ஐ தெரியாது. சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் அழைத்ததின் பேரில் நான் நீதிமன்றத்தை மதித்து நீதிமன்றத்திற்கு வந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் அனுமதி வழங்கியதின் பேரில் அதகுவி.

29.06.2017 ம் தேதி மாலை 5.00மணி அளவில் நானும் காந்தியும் அவரது வீட்டின் அருகே இருந்தோம் என்றால் இல்லை. அப்பொழுது எதிரி கோபிநாதன் அசா1 ஐ அசிங்கமான வார்த்தையால் திட்டி, சட்டையை பிடித்து இழுத்து வாய் மீது குற்றியதில் அவருக்கு பல் விழுந்ததா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2ம் எதிரி ஜெயபால் அசா1 ஐ கீழே தள்ளி காலால் மார்பு மீது எட்டி உதைத்தாரா என்றால் அதுவும் தெரியாது. 1ம் எதிரி சூரி கத்தியால்அசா1ன் வலது பக்க நெற்றியில் கிழித்து ரத்த காயம் ஏற்படுத்தி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினாரா என்றால் அதுவும் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் சம்பவத்தைநேரில் பார்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்கு வாய்தா கேட்டு அது நீதிமன்றத்தால் மறுக்கப்பட்டது.

**சாட்சி கையொப்பம்**

**(ஒம்.) அண்ணாமலை**

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,

Judicial Magistrate , Vaniyambadi.